9th March 1961]

SRI A. VEDARATHNAM: மரம் வெட்டியதைக் கண்டுபிடிக்க விசாரணைக்குச் சென்ற அதிகாரி யார் இந்த மரங்களை வெட்டிய தற்கு உடந்தையாக இருந்தாரோ அவரை அழைத்துக்கொண்டு சென்றார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இல்லையானால் இப்போது சரியான முறையில் இதைப் பரிசீலனை செய்து தேவஸ் தான மரங்கள் ஏராளமாக இந்த மாதிரி வெட்டப்படுவதைத் தடுக்க முயற்சி எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தேவஸ்தான சிப் பந்திகளில் ஒருவர் கர்ணம், மற்றும் அற நிலையப் பாதுகாப்பு இன்ஸ்பெக்டர் ஆகிய இவர்கள் இரண்டுபேரும் அந்த இடத்திற்குப் போய் விசாரித்து அந்த மாதிரி வெட்டவில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் வேறு கிராமங்களில் அம்மாதிரி திருட்டுத் தனமாக வெட்டப்பட்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. அதைப் பற்றி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

SRI A. VEDARATHNAM: இன்ஸ்பெக்டர் எந்த கர்ணத்தை விசாரணைக்கு அழைத்துக்கொண்டு போனாரோ அவரே தான் உடந்தையாக இருந்து வெட்டப்பட்டிருக்கிறது. பல மரங்கள் வெட்டப்பட்டிருப்பது அனைவருக்கும் தெரியும். அப்படியானால் அம்மாதிரி வெட்டியவர்களைக் கண்டுபிடித்து தண்டிக்காமல் விட்டு விடலாமா? ஆகையால் இதைப் பற்றி மறு பரிசீலனை செய்ய அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கர்ணம் உடந்தை யாக இருக்கிறார் என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்கள். அவர் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவராக இருக்கிறார். கர்ணமே பார்த்துச் சொல்லவில்லை. அறநிலைய இலாகா இன்ஸ்பெக்டரும் பார்த்துத்தான் சொல்லுகிறார். இதற்கு மேல் எந்தவிதமான விசாரணை நடத்துவது என்று தெரியவில்லை.

SRI S. M. ANNAMALAI: நில உச்ச வரம்பு மசோதாவில் நிலத்திற்கு மட்டும் உச்ச வரம்பு வைத்திருக்கிறார்கள். மரங் களுக்கு உச்ச வரம்பு வைக்க வில்லை. அதன் காரணமாக கோவி லுக்குச் சொந்தமாக இருக்கும் மரங்களை வெட்டிவிடுகிறார்கள் என்று புகார்கள் இருக்கின்றன. இதைத் தடுக்க என்ன நட வடிக்கை எடுக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: குறிப்பாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஒன்றும் இல்லை. நில உச்ச வரம்பு மசோதாவும் சீக்கிரம் நிறைவேற்றப்படும்.

Taluk office (Papanasam).

* 690 *Q.*—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) Whether it is a fact that the follownig records, viz., village accounts:—

(1) Patta No. 1 in current 10, Part I, Fasli 1365,
(2) Patta No. 1 in current 10, II, Fasli 1365,

[9th March 1961

(3) V.A. No. 13, Faslis 1365 to 1367,

(4) V.A. No. 14, Faslis 1364 to 1367,

(5) V.A. No. 16, Faslis 1362 to 1367,

are not available in the Taluk Office, Papanasam, Thanjavur district;

(*b*) if so, the reasons for the loss or failure to preserve the records according to the rules; and

(*c*) the action taken against the officials responsible for the loss or destruction of these records?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) to (*c*) Yes, Sir Village Accounts No. 10—Parts I and II, No. 13, No. 14C and No. 18 for some of the villages in the Papanasam taluk for Faslis 1364 onwards have not yet been deposited in the Taluk Office by the village officers concerned. Charges have been framed against them for their failure to deposit these accounts.

SRI A. VEDARATHNAM : இப்படி காணாமற்போன ரெகார்டு களை வேண்டுமென்றே அதற்கு இன்ட்ரஸ்டட் பார்ட்டீஸ் அதை மறைப்பதற்கு முயற்சி செய்திருப்பதாகத் தெரிகிறதே. அதை அரசாங்கம் பரிசிலனை செய்து இதற்குக் காரணமாய் இருந்தவர் கள் பேரிலே தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதிலே தஸ்தா வேஜு வைத்துக் காணாமல் போகவில்லை. தஸ்தாவேஜே அங்கு வரவில்லை.

Primary Health Centres

*** 691 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பிரைமரி ஹெல்த் சென்டர்களில், ஒரு டாக்டர் ஆஸ்பத்திரிலேயும், ஒரு டாக்டர் கிராமங்களில் சுற்றிப் பார்ப்பதற் காகவும் இரண்டு டாக்டர்களை நியமிக்க உத்தேசம் உண்டா ?

(இ) எப்போதிலிருந்து ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இப்போது இருக்கக் கூடிய டாக்டர்கள் எவ்வளவு நேரம் வேலை செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். ஆகவே இதில் பாதி நேரம் கிராமங் களிலும், பாதி நேரம் ஆஸ்பத்திரிகளிலும் என்று இருக்கக்கூடிய காரணத்தினால் டாக்டர்கள் வாரத்திற்கு ஒரு முறை கிராமத் திற்குக் கூட போக முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவேதான் முழு நேரமும் ஆஸ்பத்திரிகளில் கவனம் செலுத்துவதற்காக ஒரு